# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS .No.19/2023

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | | திரு. ஜான்கென்னடி | ஊர் | : | கல்யாணபுரம் |
| த.பெ. | : | திரு.ஜோதி | மாவட்டம் | : | தஞ்சாவூர் |
| வயது | : | 61 | தொழில் | : | **பொறியாளர்** |

2026ம் ஆண்டு திங்கள் பிப்ரவரி-3ஆம் நாள் **வா.சா.1 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

**முதல் விசாரணை**

சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 5.6.2020 தேதியிட்ட கடன் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.1** ஆகும். 15.3.2021 தேதியிட்ட ரூ.10,00,000ற்கான காசோலை அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.2** ஆகும். 15.9.2021 தேதியிட்ட ரூ.10,00,000/-ற்கான காசோலை அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.3** ஆகும். 3.1.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.4** ஆகும். 8.6.2011 தேதியிட்ட பிரதிவாதி பேரிலான செட்டில்மெண்ட் ஆவணம் கணினி நகல் தாக்கல் செய்கிறேன் அது **வா.சா.ஆ.5** ஆகும். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதி தாமே மேற்கொண்ட குறுக்குவிசாரணை**

நீங்கள் எனக்கு தொழிலுக்ககாக கடன் கொடுத்தீர்கள் என்றால் ஆமாம். அது முதலீடு என்றால் இல்லை. நானும் நீங்களும் பேசிய வகையில் உங்களிடம் பணம் உள்ளது என்று என்னிடம் சொல்லி தேவைபட்டால் பயன்படுத்திகொள்ளுங்கள் என்று சொல்லி தொகை கொடுத்தேன் என்றும் அந்த தொகைக்கு இலாபத்தில் பங்கு கேட்டேன் என்றும் சொன்னால் இல்லை. நான் உங்களுக்கு கொடுத்த ஒரே

ஆவணத்தில் நான் இலாபத்தில் பங்கு கொடுப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.02.03 18:48:28 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.